பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



## என்னாலேயல்லாமல் (இயேசு) ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்

யோவா. 14:6

ஆகஸ்ட் 2012

செய்தி மலர்

மலர் : 13

இதழ் : 04



## உங்கள்சகோதரரின் சிந்தனையில்...



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நமது தேவனுடைய பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் எட்டாம் மாதத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை பெற்றுள்ளோம். இந்த மாதம் நமக்கு ஒரு விடுதலையின் மாதம். லூக்கா 13:12-ல் இயேசு பதினெட்டு வருடமாய் நிமிரக் கூடாதிருந்த ஒரு ஸ்திரீயை அழைத்து; உன் பலவீனத்தினின்று விடுதலை யாக்கப்பட்டாய் என்று சொல்லி அவளை விடுவித்தார். அதே ஆண்டவர் இயேசு இப்போதும் சகல வல்லமையும் உடையவராய் நம்மையும் விடுவிக்க விரும்புகிறார்.

**நிமிரமுடியாத பிரச்சனை:-**

இங்கே பதினெட்டு வருடம் கொஞ்சமும் நிமிரக்கூடாத கூனியைக் குறித்து வாசிக்கிறோம் (லூக்கா. 13:11). இதே போல் அநேகருடைய வாழ்க்கையில் பல பாரங்கள், வருத்தங்கள், கடன் தொல்லைகள், மனக் கஷ்டங்கள், ஒரு பிரச்சனை போனால் வேறொரு பிரச்சனை என்று கொஞ்சம் கூட நிமிரமுடியாத வேதனைகள் இருக்கலாம். யாராலும் இந்த பிரச்சனையை தீர்க்க முடியாது நான்தான் சுமக்கவேண்டும் என்று நினைக்கலாம். இந்த பிரச்சனைகள், நஷ்டங்கள் எப்படி வந்தது அல்லது எப்படி வருகின்றது என்றே தெரியாமல் இருக்கலாம்.

**பலவீனப்படுத்தும் ஆவி:-**

ஒரு பலவீனப்படுத்துகிற ஆவி; அந்த ஸ்திரீயை எவ்வளவேனும் நிமிர முடியாதபடி கூனியாக மாற்றியிருந்தது. கொஞ்சம் பிசாசின் தந்திரத்திற்கு நாம் இடம் கொடுக்கும் போது அது நம்மை கொஞ்சம் கூனி நடக்கப்பண்ணும். முடிவில் கொஞ்சம் கூட நிமிரக் கூடாமல் நம்மை கூனியாக்கிவிடும். பிரியமான சகோதரனே, சகோதரியே! உங்களுக்கு இருக்கும் கடன் தொல்லை, பிரச்சனை, சரீர பலவீனம் இப்படி பலவற்றிற்கும் காரணம் ஒரு பலவீனப்படுத்தும் ஆவி உங்களை அறியாமல் உங்களை கட்டி வைத்துள்ளது. அது மாத்திரமல்ல சரியாக வேதம் வாசிக்கமுடியாத படிக்கு; ஜெபிக்க, ஊழியம் செய்ய முடியாதபடிக்கு இப்படிப்பட்ட பலவீனபடுத்துகிற ஆவி கட்டி வைத்திருக்கிறது.

**இயேசு காண்கிறார்:-**

உங்களுடைய கண்களில் உங்கள் இயலாமை அல்லது கடன் தொல்லைப் பிரச்சனை மட்டும் தான் தெரியும். நம்மை பார்க்கும் மற்றவர்கள் பார்வையிலும் அப்படித்தான். ஆனால் இயேசு அதற்கு காரணம் என்ன என்று அறிந்திருக்கிறார். நம்மை பலவீனப்படுத்தும் ஆவி

நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் -ஆதி. 12:2

ஆக்கிரமித்திருக்கிறது என்பதையும் நமது ஆண்டவர் இயேசுவுக்கு நன்றாய் தெரியும். நாம் எந்த சூழ்நிலையில் அதற்கு இடம் கொடுத்தோம் என்றும் அவருக்கு தெரியும்

**உன் பலவீனத்தின்று விடுவிக்கப்பட வேண்டும் (லூக்கா 13:12):-**

இயேசு நம்முடைய வேதனைகளை, அவமானங்களை அறிந்திருக்கிறார். உங்களை பெலவீனப்படுத்தும் ஆவி உங்களை எவ்வளவு அவமானம் வேதனைகளுக்குள்ளாய் கொண்டு சென்றது என்பதை அறிந்து, இப்போது உங்களுடைய திராணி இவ்வளவு தான் என்பதையும் அறிந்து, உங்களை விடுவிக்கும்படி இயேசு விரும்புகிறார்.

**அழைக்கும் இயேசு:-** இயேசு உங்களை விடுவிக்க வேண்டுமானால் தம்மிடத்தில் வரவேண்டும் என்று அழைக்கிறார். அவமானத்தில் இருந்த ஒரு கூனியை விடுவிக்க அன்று ஜெப ஆலயம் சென்ற இயேசு இப்போதும் உங்களை விடுவிக்கும்படி விரும்புகிறார். கூனி தான் இருந்த நிலையிலிருந்து இயேசுவிடம் வரவேண்டும் என எண்ணினாள். அதன் அர்த்தம் இயேசுவின் சத்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**இயேசு உங்களை விடுவித்து நிமிர்ந்து நடக்கப்பண்ணுகிறவர்:-**

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் இயேசு விடுதலை தருகிறார். அவரிடத்தில் என்னை இப்படித்தான் விடுவிக்க வேண்டும் என்று கேட்க தேவையில்லை. இந்த கூனி தனக்கு உதவி செய்யும்படி ஆட்களை கொடும் என்று கேட்கவில்லை. நீங்கள் இருக்கிற நிலையில் இயேசுவிடம் வந்தால் போதும், உங்களை எப்படி விடுதலை பண்ண வேண்டும் என்று அவருக்குத் தெரியும். உங்களை நிமிர்ந்து நடக்க முடியாதபடி உள்ள வேர் என்ன என்று பார்த்து அதிலிருந்தே விடுதலை பண்ணிவிடுவார். உங்களாலே நிமிர்ந்து நடக்கமுடியும். உங்களுடைய வேலையில் உயர்வுக்கா, பிள்ளைகள் படிப்பிற்காக, வங்கி கடனுக்காக மனிதர்களை சிபாரிசுக்கு அழைத்துக் கொண்டு இயேசுவிடம் வரத் தேவையில்லை. இயேசுவே வானிலும் பூமியிலும் அதிகாரம் உடையவர். அவர் உங்களுக்கு இருக்கும் கட்டுகளிலிருந்து உங்களை விடுவிக்க வல்லவர்.

**நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்துங்கள் (லூக்கா 13:13):-** இயேசு உடனே விடுதலை தரக்கூடியவர். இந்த மாதத்தில் தானே உடனே நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்துங்கள். ஏனென்றால் உங்களை விடுவிக்க இயேசுவால் மாத்திரம் முடியும். சுயமுயற்சி, நண்பர், உற்றார் உறவினர் முயற்சி இவைகளெல்லாம் நம் தேவனுக்கு இணையாகாதே. பிரியமான சகோதர, சகோதரிகளே! நீங்கள் பெற்ற விடுதலைக்காய் தேவனை மகிமைபடுத்த மறவாதீர்கள். அல்லேலூயா, தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

**கர்த்தரின் பணியில்**
**சகோ. ரவிச்சந்திரன்**

எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை -யாத். 8:10





# இப்படியா ஜெபிக்கணும்!

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாத செய்திமலர் மூலமாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவரோடு நாம் தொடர்பு உள்ளவர்களாக இருப்பதற்கு **“ஜெபம்”** நமக்கு இன்றியமையாதது. யோவான் 16:23 –ல் **“அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய் யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்”** என்று இரட்சகர் இயேசு தம்முடைய மரணத்திற்கு முன் சீஷர்களுக்கு சொன்னதிலிருந்து நாம் எதை ஜெபத்தில் கேட்டாலும் அதை இயேசுவின் நாமத்தில் கேட்க வேண்டும் என்று விளங்குகிறது. அநேகர் இன்று தங்கள் ஜெபத்தை ஆரம்பிக்கும் போது மிகவும் அன்புள்ள இயேசு சுவாமி என்று கூறி தங்கள் விண்ணப்பங்களைத் தெரிவிக்கிறார்கள்.

இன்னும் பலர் ஜெபத்தின் ஆரம்பத்தில் பிதாவைக் கேட்டு முடிக்கும் போது இயேசுவின் நாமத்தில் ஆமென் என அரைகுறையாய் முடிக்கின்றனர். இப்படிப்பட்ட ஜெபத்தின் ஆரம்பத்திற்கும் முடிவிற்கும் சம்பந்தம் கிடையாது. இன்னும் சிலர் தேவனின் திரியேக தன்மையை மறுதலிக்கிறவர் போல இயேசுவினிடத்திலேயே விண்ணப்பத்தைக் கேட்டு, முடிக்கையில் இயேசுவின் நாமத்தில் என்று சொல்லாமல் மொட்டையாக வேண்டிக் கொள்கிறோம் என்று சொல்லுகின்றனர். இவ்வாறு ஜெபங்கள் உருமாறுகின்றன. பொதுவான ஜெபங்களை இயற்றியுள்ளவர்கள் அதில் இயேசுவோ பிதாவோ இல்லாமல் சில இடங்களில் கடவுள் என்ற வார்த்தையை பயன்படுத்தி எழுதியுள்ளனர்.

இயேசு மிகத் தெளிவாக சொல்கிறார் பிதாவினிடத்தில் என் நாமத்தினாலே கேளுங்கள் என்று. இது ஒரு கட்டளை. இந்த கட்டளையை இயேசு பாடுபடுவதற்கு முன்பு சீஷர்களிடத்தில் சொல்கிறார். நீங்கள் இது வரை என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை என்கிறார் (யோவா. 16:24).

நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன். –லேவி. 26:4

இயேசு உலகத்தில் இருந்த நாட்களில் சிலர் தங்கள் தேவைகளை இயேசுவினிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். மேலும் சீஷர்கள் எங்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுங்கள் என்று கேட்ட போது இயேசு பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே (மத். 6:9-13 -ஐ வாசிக்கவும்) என்று ஆரம்பிக்கிற ஜெபத்தை அவர்களுக்கு கற்றுத் தருகிறார். ஆனால் அதில் இயேசுவின் நாமத்தில் என்று முடிக்கிற முடிவு இல்லை ஏனென்றால் இயேசு உலகத்தில் இருந்த நாட்களில் அந்த ஜெபத்தைக் கற்றுத் தந்தார் ( இயேசுவின் நாமம் இன்னும் மகிமைப்படவில்லை ). மீண்டும் யோவான் 16:23 -ல் இயேசு உலகத்தை விட்டு எடுக்கப்படும் போது அவர் சொல்கிறார் அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்க மாட்டீர்கள் என்று. அந்த நாள் என்பது இயேசு உலகத்தை விட்டு எடுக்கப்பட்ட பின்பு என்பதைக் குறிக்கிறது.

எனவே அன்பானவர்கள்! இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இந்த நாட்களில் இயேசுவினிடத்தில் அல்ல இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் நாம் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வோம் (யோவா. 14: 14-15). இயேசுவின் மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதே தேவனின் சித்தம். பிதாவினிடத்தில் நாம் எளிதாக கிட்டிச்சேர நமக்கு தேவன் கொடுத்திருக்கும் வல்லமையுள்ள நாமம் தான் இயேசுவின் நாமம். **“என்னாலேயல்லாமல் (இயேசு) ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”** (யோவா. 14:6). ஆகவே யோவான் 16:26 -ல் அந்த நாளில் (இயேசு உயிர்த்தெழுந்த பிறகு) நீங்கள் என் நாமத்தில் வேண்டிக் கொள்வீர்கள் உங்களுக்காக பிதாவை நான் கேட்டுக் கொள்வேன் என்று உங்களுக்குச் சொல்ல வேண்டியது இல்லை என்று இயேசு சொல்வதினால் நாம் அவர் நாமத்தில் கேட்கும் போது அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இந்த சத்தியத்தை மக்கள்அறியாததினால் சிலர் இயேசு மட்டும் என்றும், சிலர் யகோவா மட்டும் என்றும், வேறு சிலர் பரிசுத்த ஆவி இல்லை என்றும் குழம்பி; மக்களையும் குழப்புகின்றனர். நாமோ இன்றிலிருந்து ஜெபத்தில் பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும் இயேசுவின் நாமத்தில் கேட்போம் தேவைகளை ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோம்.

**உங்கள் சகோதரன்**
**தாமஸ் ரவீந்திரன்**



# ஒத்தாசை தரும் கர்த்தர்

**“எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்”** (சங். 121:1)

தினமும் காலை முதல் இரவு வரை பல வேலைகளை நாமாகவே செய்கிறோம். ஆனால் சில சமயங்களில் கடினமான வேலைகளை செய்வதற்கு ஒத்தாசை (உதவி) தேவைப்படுகிறது. அதிலும் சில சமயங்களில் பிறருடைய உதவி அதிகமாய் தேவைப்படுகிறது. ஆனால் தேவன் நம்முடைய தேவைகளை அறிந்து நமக்கு ஒத்தாசை செய்கிறார்.

நாம் முழுச்சோம்பேறியாய் உட்கார்ந்து கொண்டு, **“கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு”** என்று பாடினால் எதுவுமே நடந்து விடாது. அதற்காக பிரயாசப்பட வேண்டும். ஆண்டவரே! குவைத்தை, இந்தியாவை இரட்சியும் என ஜெபிப்பது நல்லதுதான். அதனோடு நாம் இதற்காக படவேண்டிய பிரயாசம் என்ன! என்றும் கேட்க வேண்டும். அதற்காக செயல்படவும் வேண்டும்.

பேதுரு இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்று சோகமாய் சோர்ந்துபோய் இயேசுவை பார்த்து சொன்ன போது, இயேசு பேதுருவை நோக்கி **ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்** (லூக். 5:4) என்ற ஒத்தாசையை அனுப்பின போது திரளான மீன்களை பிடித்தனர் என்றும் வேதத்தில் வாசிக்கிறோம்.

மேலோட்டமான பகட்டான ஒரு வாழ்வுக்காக தேவன் நம்மை அழைக்கவில்லை. ஆழமான அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். பேதுருவைப் போல நம்முடைய வாழ்க்கையும் வறண்டதாய், சுகமும் சுவையும் இல்லாததாய் காணப்பட்டாலும் நம்முடைய எல்லா நிலைமையிலும் நாம் நம் தேவனை சார்ந்து அவரையே நோக்கிப் பார்க்கின்ற பொழுது அவர் நமக்கு தேவையான ஒத்தாசையை கட்டளை இடுவார். பேதுருவைப் போன்றே திரளான ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக் கொள்வோமே. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

*அன்புள்ள சகோதரன்*

***J. கிறிஸ்டோபர் தேவராஜ்***

கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை. உபா. 4:35




## நல்ல பங்கெது தெரியுமா!

இயேசுவே ...
உமக்காக நான் செலவிடும் நேரங்கள்
உமக்காக நான் செய்யும் செயல்கள்
உமக்காக நான் பேசும் பேச்சு
உம் சமுகத்தில் நான் ஏறெடுக்கும் ஜெபங்கள்
உமக்கு நான் ஏறெடுக்கும் ஆராதனைகள்
உம்மை குறித்த சிந்தனைகள் தியானங்கள்
உம்மிடம் நான் கொண்டு வரும் ஆத்துமாக்கள்
உமக்கு நான் படைக்கும் காணிக்கைகள்
உமக்காக நான் அடையும் பாடுகள்
உமக்காக நான் எடுக்கும் தீர்மானங்கள்
உம்மை குறித்து நான் சொல்லும் சாட்சிகள்
உம்மை போல மாற நான் எடுக்கும் முயற்சிகள்
இவைகளே என் வாழ்வில் என்னை விட்டு
எடுபடாத நல்ல பங்குகள்
தேவையானதை செய்வோம் தேவையற்றவைகளை விடுவோம்
தேவனுக்காக வாழ்வோம் தேவ ராஜ்ஜியம் சேர்வோம். ஆமென்.

**- ஸ்டாலின்**

## இதுவா ரகசியம்!

நம்பிக்கை இல்லாத இடங்களில் நம்பிக்கையும்
அன்பில்லாத இடங்களில் அன்பையும்
இருளான இடங்களில் ஒளியையும்
சமாதானமற்ற இடங்களில் சமாதானத்தையும்
பயமுள்ள இடங்களில் பாசத்தையும்
பொய்யுள்ள இடங்களில் சத்தியத்தையும்
விதைக்க ஆண்டவரே எனக்கு பெலன் தாரும்.

**- அன்னை தெரசா**

இழக்க முடியாத ஒன்றிற்காக வைத்திருக்க முடியாத ஒன்றை இழப்பவன் மூடனல்ல
இழக்க முடியாதது பரலோக வாழ்வு வைத்திருக்க முடியாதது நமது உயிர்.

**- ஜிம் எலியட்**

உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர் -யோசு. 2:11

# சிந்தித்து செயல்படும் நேரம் - மௌனமாயிருக்காதே

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்க்கையிலும் நம்முடைய சபையிலும் நாம் சிந்திக்க வேண்டியதும் செயல்படுத்த வேண்டியதும் பல உள்ளன.

**சிந்திக்கும் காலம்:- "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்"** (நீதி. 4:23). நம்முடைய இருதயமானது தேவன் தங்குகின்ற வாசஸ்தலமாக இருக்க வேண்டும். குடும்ப வாழ்விலும் சபையிலும் நம் தேவனை மத்தியஸ்தராகக் கொண்டு வாழ்கின்றோமா என்றும் சிந்திக்க வேண்டிய காலம் இது. நம்முடைய வாழ்க்கையை பரிசுத்தமானதாக நாம் காத்துக் கொண்டால் தேவன் ஜீவ ஊற்றாகிய ஆவியின் கனிகளை நமக்குத் தந்தருளுவார்.

**செயல்படும் நேரம்:-** ஆத்தும ஆதாயம் நம் வாழ்வில் உண்டா? எதிர்கால வாழ்வினை நினைத்து நாம் சோர்ந்து போய் விட்டோமா? நம்முடைய வீடுகளில் வேலை ஸ்தலங்களில் உறவினர்கள் மத்தியில் சபையின் மத்தியில் நம்முடைய செயல்கள் எவ்வாறு உள்ளது? என்றெல்லாம் நாம் நம்மையே ஆராய்ந்து முதலில் சரி செய்ய வேண்டும். **"அறுவடை மிகுதி வேலையாட்களோ மிக கொஞ்சம்"** ஆதலால் அறுவடைக்கு ஆட்களை ஆண்டவர் கண்ணீரோடு தேடி அலைகின்றார். ஆண்டவரின் கண்ணீரைத் துடைக்கும் அத்தகைய ஆத்தும ஆதாயம் நம் வாழ்வில் உண்டா! இல்லை என்றால் நம்மை நாமே ஆயத்தப்படுத்தி ஆத்தும அறுவடைக்கு செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது.

**மௌனமாயிருக்காதே:-** மௌனமாயிருக்கும் காலமல்ல.... இரட்சிப்பு வேறு இடத்திலிருந்து வரும்... (எஸ்தர். 4:4) ஆண்டவரின் சத்தியத்தை அறிந்த நாம் மௌனமாயிருப்பது தவறு. தேவன் நமக்கு செய்த நன்மைகளையும் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையையும் மகத்துவங்களையும் குறித்து நாம் பிறரிடம் பகிர்ந்து கொள்வதால் பிறரை நாம் இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்த முடியும். "எத்தனை முத்துக்கள் உந்தன் கிரீடத்தில் மரிக்கும் முன்பு நீ சேமிப்பாய் நீதிமான்களோடே உயிர்த்தெழும் முன்பு எத்தனை முத்துக்கள் உந்தன் கிரீடத்தில்" என்ற பாடலைப் போல் நம் சிரசை அலங்காரமும் அழகும் செய்யும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய மௌனத்தைக் கலைக்க வேண்டியது மிக அவசியம். இன்றே ஆயத்தமாவோம் செயல் வீரனாக வீராங்கனையாக மாறுவோம். அதற்கு கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக. நம்மையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*அன்புள்ள சகோதரி*

*பியூலா மெர்சி ஜெகநாதன்*

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுவேன் -நியா. 5:3

# களிமண்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. ஏசா. 64:8 ‑ல் **“கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்கு கிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை. நாம் அனைவரும் ஆண்டவரின் கரத்தின் கிரியை”**. அதனால் கர்த்தர் தம்முடைய கிரியைகளிலே மகிழுவார். அதிலும் மனுஷனை மண்ணி னாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை நமக்குக் கொடுத்தார் (ஆதி. 2:7).

தாவீது தன் சங்கீதம் 103:14 ‑ல் **“நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்”**. அதனால்தான் ஆதாமைப் பார்த்து நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்று கடிந்து கொள்கிறார். நம்மை கடிந்து கொள்வதற்கும் சிட்சிப்பதற்கும் அவருக்கு உரிமை உண்டு. நாம் அவரை பார்த்து கேள்வி கேட்க முடியாது. **“தன்னை உருவாக்கினவரோடே வழக்காடு கிறவனுக்கு ஐயோ!”** என்று ஏசாயா 45:9 ‑ல் வாசிக்கிறோம். களி மண் தன்னை உருவாக்கினவனை நோக்கி என்ன செய்கிறாய் என்று முறுமுறுக்கலாகுமோ!

மனுஷனே! தேவனோடே எதிர்த்து தர்க்கிக்க நீ யார்? **“உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உருவாக்கினாயென்று சொல்லலாமா?”** (ரோம. 9:20) என்று பவுல் சொல்லியிருக்கிறாரே. மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தை கனமான காரியத்திற்கும் ஒரு பாத்திரத்தை கனவீனமான காரியத்திற்கும் பண்ணுகிறதற்கு மண்ணின் மேல் அதிகாரம் இல்லையா!

எனவே எஜமானனுக்கு வேலையாள் கீழ்ப்படிந்து இருப்பது போல நாமும் கர்த்தருடை சித்தத்திற்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். அத்தோடு நமக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட தாலந்தை ஆண்டவருக்காக செலவிடும் போது நம்மை உயர்த்துவார். **“ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்”** (Iபேது. 5:6) என்றும் பேதுரு வலியுறுத்துகிறார். எனவே களிமண்ணால் உருவாக்கப்பட்ட நாம் கர்த்தருக்கு அடங்கி இருப்போமே. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக ‑ரூத். 3:10

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. வனிதா பால் புருஷோத்தமன்
- செல்வி. காயத்ரி கொம்மையன்
- செல்வி. நித்தி ஏஞ்சலினா செல்வகுமார்
- செல்வன். எரிக்நாதன் மார்க் ஆன்றனி
- செல்வன். ரோஷன் ஸ்டீபன்
- சகோ. ஜெப துரை
- சகோ. ஜெயச்சந்திரன்
- சகோ. ஜோப் ஆபிரகாம் வில்கின்ஸ்
- சகோ. வில்சன் செல்லையன்
- சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
- சகோ. ஆரோக்கிய தாஸ்
- சகோ. சதீஷ்குமார்
- சகோ. வேளாங்கண்ணி
- சகோ. அருண் இம்மானுவேல்
- சகோ. எசேக்கியேல் ஞானதாஸ்
- சகோ. அற்புதராஜ்
- சகோதரி. மிலி ஜெஸ்டஸ்
- சகோதரி. மெர்ஸ்லின் தயா யேசுரெத்தினம்
- சகோதரி. ஐரின் ஃப்ரீடா டென்சிங்
- சகோதரி. வெற்றிச்செல்வி பால்புருஷோத்தமன்
- சகோதரி. லைசா பால்பொன்னையன்
- சகோதரி. ஸ்நேகலதா கிறிஸ்டோபர்
- சகோதரி. புஷ்பா ராஜன்
- சகோதரி. சௌமியா சுனில்வின்ஸ்
- சகோதரி. டெய்சி ஸ்ரீனா மாற்க்ஆன்றனி



# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. ஜெயகுமார் ஞானதாஸ்
- திருமதி & திரு. ஜாண்போஸ்கோ
- திருமதி & திரு. பால்ராஜ் ஆமோஸ்
- திருமதி & திரு. சிவகுமார்
- திருமதி & திரு. ஆரோக்கியராஜ்
- திருமதி & திரு. நித்ய செல்வகுமார்
- திருமதி & திரு. விஜய் இம்மானுவேல்
- திருமதி & திரு. பால் புருஷோத்தமன்
- திருமதி & திரு. ராஜாசிங்
- திருமதி & திரு. சாலமோன்



கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக என்றான். 1சாமு. 17:37

# ஆகஸ்ட் 2012 ஆலய ஆராதனைகள்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 05-08-2012 | சகோ. தாமஸ் ரவீந்திரன் |
| 12-08-2012 | சகோ. அசோக்குமார் |
| 19-08-2012 | சகோ. பிரேம்குமார் |
| 26-08-2012 | சகோ. ஜெயசேகர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 03-08-2012 | சகோ. ஜஸ்டின்சுந்தரராஜ் | சகோ. ஸ்டாலின் |
| 10-08-2012 | சகோ. ஐசக் துரை | சகோ. கிறிஸ்டோபர் |
| 17-08-2012 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24-08-2012 | சகோ. வில்சன் | சகோ. ரவிச்சந்திரன் |
| 31-08-2012 | சகோ. அற்புதராஜ் | குடும்ப ஆராதனை |

சங்கிலி தொடர் ஜெபம்: 02-08-2012 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 09-08-2012 இரவு 11 மணி முதல் காலை 3 மணி வரை

வாலிபர் கூடுகை: 24-8-2012, Br. சஜின்ராஜன் இல்லம், மங்காஃப்

பெண்கள் கூடுகை: 18.8.2012, Sis.பிரியதர்ஷ்னி ரிச்சர்ட்சன் டேனியேல் இல்லம், மங்காஃப்

கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். _IIசாமு. 6:21

# ஜெபத்தில் ஓர் தெளிவும் திட்டமும்

லூக்கா **18:35-43** -ல் ஒரு குருடனைப்பற்றியும் அவனுக்கு இயேசு பார்வை கொடுக்கிறதைப் பற்றியும் காண முடிகிறது. இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என அழைத்தவுடனே அவனுக்கு இயேசு பார்வை கொடுத்துவிடவில்லை. அநேகர் அவனை பேசாமல் இருக்கும்படி அதட்டினாலும் அதை அவன் பொருட்படுத்தாமல் இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என இரண்டாம் விசை அதிக சத்தமாய் கூப்பிட்டபோது இயேசு அவனை அழைத்துவர கட்டளை கொடுக்கிறார். இப்போது அக்குருடன் இயேசுவின் அருகில் அதாவது மிக அருகில் இருக்கிறான். இருந்தும் கூட **இயேசு அவனைப் பார்த்து நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என கேட்டார்** (லூக். 18:41).

பிரியமானவர்களே! சர்வவல்ல தேவனாகிய இயேசுவிற்கு நம் உள்ளிந்திரியங்களையும் நினைவுகளையும் அறிந்திருக்கிற தேவனுக்கு தெரியாதா! அவன் குருடன் என்றும் அவனுடைய வாஞ்சை தான் பார்வை அடைய வேண்டும் என்றும்: இருந்தும் ஏன் இயேசு அவனைப் பார்த்து அவ்வாறு கேட்டார் என்றால்... அக்குருடனுடைய வாயிலிருந்து வருகிற விண்ணப்பமாகிய ஜெபம் ஒரு தெளிவும் திட்டமுமாக இருக்க வேண்டும் என இயேசு விரும்பினார்.

அது மாத்திரமல்ல நமக்கு ஒரு ஜெப முறையை கற்றுக் கொடுக்கிறார். என் குறை அல்லது தேவை இதுதான் என்று நாமும் தெளிவும் திட்டமுமாக ஜெபிக்க வேண்டும் என இயேசு விரும்பினார். ஆகவே தான் இயேசு அக்குருடனிடம் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என கேட்டார். இயேசு அப்படி கேட்ட மாத்திரத்திலே அவனும் தெளிவு பெற்றவனாய் திட்டமாய் இயேசுவே நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசுவும் அவனை நோக்கி நீ பார்வையடைவாயாக உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப்படுத்தினான் (லூக். 18: 42-43). தேவ பிள்ளைகளே! நமக்கு விசுவாசம் இருக்கிறது; நம்பிக்கை இருக்கிறது; ஜெபிக்கின்ற வாஞ்சை இருக்கிறது. இருந்தும் சில நேரங்களில் நம் ஜெபங்களுக்கு பதில் வராமல் போவதற்கு காரணம் மேலே குறிப்பிட்ட வண்ணமாக நாமும் ஒரு தெளிவோடும் திட்டத்தோடும் ஜெபிக்க மறந்து விடுகிறோம் என்பதுதான். இனிமேலாவது நம் தேவை அல்லது குறை எதுவானாலும் அதை நன்றாக தீர்மானித்து தேவனிடம் தெளிவும் திட்டமுமாக ஜெபிக்க முற்பட வேண்டும். இப்படி ஜெபிக்கும் போது நிச்சயம் நம் ஜெபத்திற்கு எதிர்பார்த்த ஆசீர்வாதங்கள் தடையின்றி தாமதமின்றி வந்து சேரும். எனவே இன்று முதல் **"தெளிவோடு திட்டமாக ஜெபிப்போம்"**. தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

***கிறிஸ்துவுக்குள் சகோதரி***
***ஜெயக்கொடி ஜாண்வெஸ்லி***

கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள் -இராஜா. 18:39

# எட்டு வரிகள்




இயேசுவே...
எட்டுத் திக்கும் சுற்றித் திரிந்து
எட்டா மானிட உள்ளங்கள் கவர்ந்தாய்
எட்டிக்காயாய் கசக்கும் மானிடர் பாவங்கள்
எட்டியே தூரம் போக வைத்தாய்
ஏட்டிலே மட்டும் உனை படித்துவிட்டு -நான்
எட்டியே நிற்பது நியாயமோ -மன
ஏட்டிலும் உனை பதித்து வாழ்வேன் என்பதை -இந்த
எட்டுவரிக்குள் சொல்லி முடிக்கிறேன்.

***- S & S***

---

**"Before an individual can be saved he must first learn that he can not save himself"**

**-M.R Dehan (MD)**

---

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியர்கள், அவர்களுடைய ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்...

இந்த ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 94494541

---

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள், அந்த ஸ்தாபனங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்...

இந்த ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜான் பீட்டர் - போன்: 65507092

---

சபையின் ஆராதனைகளில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு வாகன வசதி தேவை என்றாலோ, வாகனத்தின் செலவைத் தாங்கும் விதத்தில் காணிக்கை கொடுக்க விரும்பினாலோ... தொடர்பு கொள்க:

சகோ. ஸ்டீபன் - போன்: 65868048



14



## நிரப்புக: நிஜமாகவே பரிசு உண்டாம்

1. ________ என்பவன் இயேசுவை பார்த்து நீர் உலகிற்கு உம்மை வெளிப் படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்த என்ன காரணம் என்றான்.
2. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு முதல்முதல் ________க்கு தரிசனமானார்.
3. இயேசு கிறிஸ்து ஒலிவமலையின் மேல் உட்கார்ந்து அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய காரியங்களை சொல்லும் போது அவரோடு இருந்த சீசர்கள் ____________ ______________
4. இயேசு கிறிஸ்து ________லே உலாவிக் கொண்டிருக்கும் போது யூதர்கள் அவரை சூழ்ந்து கொண்டு நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள்.
5. தேவன் ________க்கு தேவனாயிருக்கிறார்.
6. ________இஸ்ரவேலில் ஆறுதல் வர பரிசுத்த ஆவியைப் பெற்று காத்திருந்தான்.
7. இயேசு கிறிஸ்து________கண்டு கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.
8. மனுஷன் உலகம் முழுவதற்கும் சொந்தக்காரன் ஆனாலும் ________ நஷ்டப்படுத்தினால் அவனுக்கு ________உண்டாகுமோ.
9. ஒருவன் தன் சிநேகிதருக்காக ________அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.
10. தேவனுடைய ராஜ்ஜியம் வர காத்திருந்தவன் ________.
11. **மணவாளன் வருகிறார்** என்ற வார்த்தை ________-ல் எழுதப்பட்டுள்ளது. (அதிகாரம் : வசனம்)
12. **இயேசு வருகிறார்** என்ற வார்த்தை ________-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. (அதிகாரம் : வசனம்)
13. ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் ________பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை.
14. மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும் போது தேவனுடைய ஜனங்கள் பரலோகத்தில் ________போல காணப்படுவார்கள்.
15. ________மெய்யாகவே இவர் (இயேசு) நீதிபரனாயிருந்தார் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான்.

குறிப்பு:- வேதாகமத்தில்... மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வருகிற 12-8-2012 -ம் தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக -1நாளா. 16:10



## ஜூலை மாதக் கேள்விகளுக்கு பதில் இதோ

| | | |
|---|---|---|
| 1. | ஸ்திரீயுடன் விபச்சாரம் பண்ணுகிறவன். | நீதி. 6:32 |
| 2. | மனமகிழ்ச்சி | நீதி. 15:13 |
| 3. | சாலொமோன் | நீதி. 13:13 |
| 4. | துன்மார்க்கன் | நீதி. 5:22 |
| 5. | வன்கண்ணன் | நீதி. 23:7 |
| 6. | சுறுசுறுப்புள்ளவனுடைய | நீதி. 10:4 |
| 7. | யாக்கேயின் குமாரனாகிய ஆகூர் | நீதி. 30:1, 7 |
| 8. | நீதிமானுக்கு | நீதி. 12:21 |
| 9. | பரியாசக்காரர்கள் | நீதி. 29:8 |
| 10. | சாலொமோன் | நீதி. 3:32 |
| 11. | புத்தியீன வாலிபனுடைய | நீதி. 7:7, 23 |
| 12. | சாலொமோன் | நீதி. 27:7 |
| 13. | மதிகேட்டை | நீதி. 14:17 |
| 14. | பாவிகள் | நீதி. 1:10-12 |
| 15. | சாலொமோன் | நீதி. 27:22 |

Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. ஜெபா
Sis. குமுதினி வில்சன்
Sis. சாந்தி சீனிவாசன்
Sis. அனிதா தாஸ்
Sis. செலின் டேவிட்
Bro. இயேசு நாயகம்
Bro. சந்திர குமார்

Sis. ஹேனாளசேக்கியல்
Sis. கீதா ஜெயகுமார்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. ஐரின் சிங்
Sis. ஜீனா சதீஷ்குமார்
Sis. பியூலா மெர்சி பால்ஜெகநாதன்
Sis. அனுஷ்யா டேவிட்சன்
Bro. ஜாண்
Bro. ஜாண்சன்



## *இ(ப)துப்படி!!!*




அன்பை அடக்கி வைக்காதீர்
ஆண்டவருக்கு பிடிக்காது.
பாவத்தில் மிச்சம் வைக்காதீர்
பரத்தில் இடம் கிடைக்காது.

**- கொம்மையன்**

கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. –IIநாளா. 19:11

# நித்திய ஜீவன்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. நம் ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (Iதெச. 5:23). ஆனால் இதை நாம் சாதாரணமாக நினைத்து செயல்படுகிறோம். காரணம் இச்சை என்கிற இச்சையின் ஆவி நம்மை அப்படி செயல்படுத்துகிறது. ஆத்துமாவுக்கு விரோதமாய் போர்ச் செய்கிற மாம்ச இச்சை (Iபேது. 2:11) எனபேதுரு குறிப்பிட்டிருக்கிறார். இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக். 1:15) என்றும் வேதத்தில் வாசிக்கிறோம்.

இச்சையானது ஆத்துமாவுக்கு விரோதமாய் போர்ச் செய்கிறது. மட்டுமல்லாமல், ஆத்துமாவை மரணத்திற்கு ஏதுவாக பாதாளத்தில் தள்ளிவிடுகிறது. எனவே நம் ஆத்துமா மரித்துவிடாதபடிக்கு மாம்ச இச்சைகளை விட்டு விலக வேண்டும். நம் தேவனை நாம் உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும் போதும் இச்சையை விட்டு விலக முடியும். ஏனென்றால் நம் தேவன் நம் ஆத்துமாவுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர் (Iபேது. 2:25) மற்றும் தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார் (Iயோவா. 5:11)

இந்த வசனங்கள் மூலம் நம் தேவன் நம்முடைய ஆத்துமாவுக்கு அழிவே இல்லாத நித்திய ஜீவனை தந்து அவரே நம் ஆத்துமாவுக்கு மேய்ப்பரும் கண்காணிக்கிறவரும் (பாதுகாக்கிறவருமாய்) இருக்கிறார். ஏனென்றால் தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி. 2:7). தேவன் அவருடைய ஜீவசுவாசத்தை நம் நாசியிலே ஊதியதால் நாம் ஜீவாத்துமாவானோம். அந்த ஆத்துமா மீண்டும் நித்திய ஜீவன் உள்ள பரலோகத்திற்கே திரும்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஏனென்றால் நம் ஜீவனுள்ள தேவன் பரலோகத்திலே வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

ஆகவே துர்இச்சைகளுக்கு உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுங்கள் (ரோம. 13:14). இந்த தேவனுடைய வார்த்தையின் மூலம் நம் சரீரமாகிய உடலை இச்சைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்கிறார். ஏனென்றால் நீங்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள் (எஸ்றா. 8:28). நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய

எங்கள் தேவனுடைய கரம் எங்கள் மேலிருந்து...... எங்களைத் தப்புவித்தது. _எஸ்றா. 8:31

ஆலயமாயிருக்கிறீர்களே; நீங்களே அந்த ஆலயம் (Iகொரி. 3:16-17). நம்முடைய சரீரம் தேவன் தங்குகிற ஆலயமாய் இருப்பதால் பரிசுத்தமாய் காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நம் தேவன் பரிசுத்தர். ஆகையால் நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோம. 12:1).

இப்படியாக நம் சரீரத்தை நீதியுள்ள தேவனுக்கு அடிமையாக தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கும் போது நம் சரீரத்தில் அவர் தங்கி வாசம் செய்கிறார். பின்பு நம் ஆத்துமாவிற்கு கண்காணியும் மேய்ப்பருமாய் இருந்து நித்திய ஜீவனை தருவார்.

*கர்த்தரின் பிரியமான*

***சகோ. ஜஸ்டிஸ்***

## சபையின் 2012-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

**“பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்”**

**யோசு. 1:9**




### *எழுதுகோல்*

அரசியல்வாதியிடம் இருந்தேன்.
ஆடம்பரமாய் பொய் சொன்னேன்.
எழுத்தாளனிடம் இருந்தேன்.
கானல் நீராய்த் தவழ்ந்தேன்.
இயேசுவின் ஊழியக்காரனிடமிருந்தேன்.
புண்ணியம் அடைந்தேன்.
உலக இரட்சகர் **இயேசு**
என்று எழுதின உடனே.

**- அஃபியா ஆ. தாஸ்**

# வேதம் வாசிக்க வாங்க

கர்த்தருடைய வேத வசனம் ஜோடி ஜோடியாகத்தான் இருக்கும். ஆகவே வேதத்தை வாசிக்கும் போது ஏற்ற வசனத்தைத் தேடி வாசித்து கண்டு பிடிக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் வேத வசனங்களை நன்றாய் அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக ஆதியாகமத்தில் ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று வாசிக்கிறதை, பழைய ஏற்பாட்டிலே வேறு இடத்தில் ஏனோக்கைப் பற்றி நல்ல குறிப்பை காணமுடியாது. ஆனால் புதிய ஏற்பாட்டில் எபி. 11:5 -ல் விசுவாசத்தினாலே ஏனோக்கு... என்ற வார்த்தையையும் யூதா. 14, 15 -ல் "ஆதாமின் ஏழாம் தலைமுறையான ஏனோக்கு நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கர்த்தர் வருகிறார்" என்பதையும் பல ஆயிரவருடங்களுக்கு முன்பாகவே அறிவித்தார் என்றும் காணமுடியும். இவ்வாறு வேதத்தை தேடி வாசிக்கும் போதுதான் அதற்கு ஏற்ற ஜோடியான வார்த்தை நமக்கு கிடைக்கும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு சொல்லோவிய வேதாகமாவது வைத்துக் கொள்வது மிகுந்த பலனைத் தரும். இது வேதத்தின் சந்தேகங்களை புரிந்து படிக்க ஏதுவாக இருக்கும்.

இன்னும் விளக்குவதாக இருந்தால், வெட்டுக் கிளியையும் காட்டுத் தேனையும் யோவான்ஸ்நானகன் உண்டு வந்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். யோவான்ஸ்நானன் வெஜிட்டேரியன் ஆச்சே பின்பு எப்படி அசைவம் சாப்பிட்டார் என்ற சந்தேகம் ஏற்படலாம். வெட்டுக்கிளி என்பது ஒருவகை கிழங்காக இருக்கலாமே என்று சில நேரங்ளில் நாமாகவே நம் மனதில் நினைக்கலாம், இதற்கு ஏற்ற ஜோடி வார்த்தையே நமக்கு தெளிவான விளக்கத்தை தரும் லேவி. 11:22 -ல் வெட்டுக்கிளி ஜாதி ஜாதியாய் இருக்கிறதையும், சோலையாம் என்னும் கிளி ஜாதி ஜாதியாய் இருக்கிறதையும், அர்கொல் என்னும் கிளி ஜாதி ஜாதியாய் இருக்கிறதையும், ஆகாபு என்னும் கிளி ஜாதி ஜாதியாய் இருக்கிறதையும் வெளிப்படுத்துகிறது. இதிலிருந்தே யோவான்ஸ்நானகன் உட்கொண்டது லேவியராகமத்தில் உண்ணும்படி அனுமதிக்கப்பட்ட ஒருவகை வெட்டுக்கிளி என்பது நமக்கு புரிகிறது. இப்படி வேதத்தை வேத வசனங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தே விளங்கிக் கொள்ள வேண்டும். (நம்முடைய வேதம் எபிரேயம் மற்றும் கிரேக்க மொழிகளிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உவமைகளினால் வாயை திறப்பார் என்ற தீர்க்கத்தரிசனத்தின்படி அவருடைய பிரசங்கமும் இருந்தது. எந்த சத்தியத்தையும் எளிமையாக எடுத்துச் சொல்லும் உதாரணங்களையும் உவமைகளையும் உண்மை சம்பவங்களையும் இயேசு எடுத்துப் பேசினார். ஆகவே நாம் கேட்கிற எந்த ஒரு காரியத்தையும் இருதயத்தில் சேமித்து வைக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் தேவனுடைய மனுஷன் தேறினவனாயிருக்க வேண்டும் என்கிறார். ஆகவே பரிசுத்தவான்களின் வாழ்க்கைக் குறிப்புகள், கடந்தகால உண்மை நிகழ்வுகள் உட்பட நிகழ்கால நாட்டு நடப்புகள் அறிந்து வைத்திருப்பதும் பயனுள்ளதே. எல்லாவற்றிற்கும் மேலாக வேதத்தை அறிகிற அறிவே மிகுந்த ஆன்மீக பயனைத்தரும் என்பது திண்ணம். தேவனுக்கு மகிமையுண்டாவதாக. ஆமென்.

**அன்புள்ள சகோதரன்**
**இயேசுநாயகம்**

உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் -எஸ்தர். 5:16

# விசுவாசக் கண்கள்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நம்முடைய கண்கள் காணாத ஏராளமான ஆசீர்வாதங்கள் நமக்கு உண்டு. அவைகள் அனைத்தும் நம்முடைய கண்களுக்கு மறைவாகத்தான் இருக்கிறது. நம் கண்களுக்குத் தெரிந்தது எல்லாம் அன்றாட வாழ்வில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போராட்டங்களும் சரீர பெலவீனங்களும் பொருளாதார நெருக்கடியுமே. ஆனால் கர்த்தர் விரும்பும் விசுவாசப் பார்வை உடையவர்களாய் நாம் மாறினால் எண்ணி முடியாத அதிசயங்களையும் அற்புதங்களையும் நாம் காண்பது நிச்சயம்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்முடைய பார்வை மிகவும் முக்கியம். நாம் தேவனுடையவர்களாயிருந்தாலும் விசுவாசம் இல்லாதவர்களாயிருந்தால் நம்முடைய வாழ்க்கையில் கர்த்தரால் கூட அற்புதம் செய்ய முடியாது. எண்ணாகமம் 13 -ம் அதிகாரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு முன்பு அந்த தேசம் எப்படிப்பட்டது என்று பார்த்து வரும்படி பன்னிரண்டு கோத்திரத்தில் ஒருவர் வீதம் பன்னிரண்டு பேர் சென்றனர். அதில் பத்து பேருடைய கண்களின் பார்வையும் பேச்சும் அவிசுவாசம் உடையதாக இருந்தது. காரணம் என்னவென்றால் அவர்களுடைய கண்கள் வெளிப்பாடு இல்லாத கண்களாய் இருந்தது. அப்படிப் பட்டவர்கள் கூறும் செய்திகள் யாவும் துர்ச்செய்திகளாகவே இருக்கும். அப்படிப்பட்டவர்கள்வாழ்வில் எதையும் சுதந்தரித்துக் கொள்ளவும் முடியாது.

ஆனால் விசுவாசப் பார்வை உடையவர்கள் நற்கிரியைகளைக் குறித்தும் நற்செய்தியைக் குறித்தும் பேசுவார்கள். கானான் தேசத்தை பார்க்கச் சென்ற பன்னிரண்டு பேரில் இருவரான யோசுவாவும் காலேபும் அவிசுவாச அறிக்கை செய்த பத்து பேர் கண்ட காட்சிகளைத்தான் இவ் இருவரும் கண்டார்கள். ஆனாலும் யோசுவாவும் காலேபும் கூறின விசுவாச வார்த்தையினிமித்தம் இவ்விருவரும் கானான் தேசத்தை சுதந்தரித்தார்கள். இந்த இருவரைப் போன்றே நம்முடைய விசுவாசமும் பார்வையும் இருக்க வேண்டும். **“நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்”** (யோவா. 11:40) என்றும் நம் இரட்சகர் இயேசு சொல்லியிருக்கிறாரே. நம் கண்கள் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரையே நோக்கிப் பார்த்து அவரிடமே உறுதியான விசுவாசம் வைப்போம். அதற்கு ஏற்ற விசுவாசக் கண்களாய் நம் கண்கள் மலரட்டும். வாழ்வும் உயரட்டும். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**Sis. ஹேனா எசேக்கியேல்**

ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும்; எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். -யோபு. 9:10

## நம் சபைக்கு ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
**66889706**

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
**66021072**

**பொருளாளர்**
சகோ. விசு
**90049925**

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜாண்வெஸ்லி
**99145593**

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
**60692485**


சபையின் திருவிருந்து


Bro. சதீஷ் - Sis. ஜீனா தம்பதியரின் குழந்தை பிரதிஷ்டை

**Church website: www.ahmaditamilcongregation.org**

சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்

—— (Your Name), P. BOX. NO- 46795, 64018 – FAHAHEEL, KUWAIT.

சபையின் இ- மெயில் விலாசம்

ahmaditamil.kw@hotmail.com

உங்கள் ஜெபவிண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

(Private Circulation Only)